# Tamil Murli Quiz 03-10-2015

தமிழ் முரளி வினாடி-வினா
முரளியினை மறுமுறை நினைவுற உதவும் வினாடி-வினா. இன்றைய முரளியிலிருந்தே கேள்விகள் கேட்கப்படும்.
இங்கே கிளிக் செய்க: 20 நிமிட முரளியின் எம்பி3 கோப்புகள் மற்றும் பழைய வினாடி-வினா.abc

**Q.1)** <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

**ஸ்ரீ கிருஷ்ணருடைய பெயர் அவருடைய தாய் தந்தையரை விட அதிகம் புகழ்பெற்றதாக இருக்கிறது, ஏன்?**

A. கிருஷ்ணருடைய தாய் தந்தையர் ஒன்றும் யோகபலத்தின் மூலம் பிறவி எடுக்க வில்லை
B. முழுமையாக கர்மாதீத் நிலையை அடைபவர்கள் ராதை-கிருஷ்ணர் மட்டுமே
C. சங்கமயுகத்தில் ஸ்ரீகிருஷ்ணருடைய ஆத்மா, அனைவரிலும் அதிக முயற்சி செய்துள்ளது
D. மேலே கூறிய அனைத்தும்

**Q.2)** <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

**எப்போது தான் பாபாவை நினைவு செய்ய முடியும்?**

A. பாபாவை முதலில் தெரிந்து கொண்டால்
B. முதலில் தன்னை ஆத்மா என்று புரிந்து கொண்டால்
C. தூய்மையான மனது இருந்தால் தான்
D. ஞானத்தை மழுமையாக புரிந்து கொண்டால்

**Q.3)** <u>கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்பவும்:</u>

**ஞான மார்க்கம் ____________________ மார்க்கமாகும், இதன்மூலம் நீங்கள் 21 பிறவிகள் புத்திசாலிகளாக ஆகி விடுகிறீர்கள்.**

A. சிறந்த
B. பிராமணர்கள்
C. சிவ தந்தையின்
D. தன்னை அறிந்து கொள்ளும்

**Q.4)** <u>சரியா? தவறா?</u>

**இப்போது நீங்கள் சங்கமயுகத்தில் இருக்கின்றீர்கள். மற்றவர்கள் அனைவரும் கலியுக மனிதர்களாக இருக்கிறார்கள்.**

A. சரி
B. தவறு

**Q.5)** <u>கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்பவும்:</u>

**பக்தி மார்க்கத்தில் அனைவரும் _____________________ விட்டார்கள்.**

A. பக்தர்களாக
B. முட்டாள்களாக
C. தமோபிரதானமாகி
D. துக்கம் அடைந்து

**Q.6)** <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

**ஆத்மா முதலில் சதோபிரதானமாக இருந்தது பிறகு தமோபிரதானமாக ஆகியது என்று புரிந்து கொள்பவர்கள் யாருமே இல்லை ஏன்?**

A. ஏனென்றால் அவர்கள் பக்தர்களாக உள்ளார்கள்
B. ஏனென்றால் அவர்கள் திவ்ய புத்தியை உபயோகிக்கவில்லை
C. ஏனென்றால் அவர்கள் ஆத்மாவில் எதுவும் ஒட்டாது என்று புரிந்துள்ளார்கள்
D. ஏனென்றால் அவர்கள் ஆத்மா தான் பரமாத்மாவாகிறது என்று உரைப்பவர்கள்

*Q.7)* <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

**யார் சூரியவம்சத்தவர்களாக ஆவார்கள்?**

A. யார் நல்ல விதத்தில் முயற்சிப்பார்களோ
B. யார் குணங்களை நல்ல முறையில் தாரணை செய்கிறார்களோ
C. யார் ஞானம் நிறைந்தவர்களோ
D. யார் தந்தையை சதா நினைவு செய்கிறார்களோ

*Q.8)* <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

**யாராவது கிறிஸ்துவர்கள் இருக்கின்றனர் என்றால் அவர்களுடைய விதை கிறிஸ்து ஆவார். உங்களுடைய விதை யார்?**

A. பாபா
B. பிரம்மா
C. பிராமணர்கள்
D. தேவதைகள்

*Q.9)* <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

**பாபா சங்கமயுகத்தில் தான் வருகின்றார். இதனை ஏன் லீப் யுகம் என்று சொல்லப்படுகிறது?**

A. பாபா வருவதால்
B. இது யாருக்கும் தெரியாத யுகமாகும்
C. நாம் சத்தியமான பிராமணர்களாக ஆவதால்
D. இது மிகவும் சிறிய யுகமாகும் ஆகையினால்

*Q.10)* <u>சரியா? தவறா?</u>

**இப்போது உங்களை தெய்வீக சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்ல முடியாது**

A. சரி
B. தவறு